தற்கும் அங்கே உங்களுக்கு கிடைத்த அந்த அனுபவங்களை நீங்கள் தெரிவித்ததற்கும் நான் நன்றியை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக நீங்கள் சொல்வதைப் போல் தான் இங்கே மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் பிளாஸ்டிக் பக் கெட்டுகள் கொடுத்து அதன் மூலமாக குப்பைகளைக் கொட்டி வெளியே கொண்டுவந்து வைக்கப்படவேண்டும் என்றும் மா நகராட்சி வண்டி வந்து அந்த குப்பைகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் நாங்கள் ஏற்பாடுகளைச் செய்தோம். ஆனால் எந்த அளவுக்கு மக்கள் இதை அனுசரித்து அதை அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை தான் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக நாம் டஸ்ட்டுபின் என்று சொல்லக்கூடிய குப்பைத் தொட்டிகளை ஒவ்வொரு இடத்திலும் வைக்கிறோம். ஆனால் ஒரு வாரக் காலத்தில் அவைகள் எல்லாம் பழைய இரும்புக் கடைக்கு போய்விடு கின்றன. டஸ்ட்டுபின்னில் இரும்பை சேர்த்து செய்கிறார்கள். ஆகவே அந்த டஸ்ட்டுபின்னை உடைத்து அந்த இரும்பு கம்பி களை எடுத்துச்சென்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் பல்வேறு பகுதிகளில் பேவ் மெண்டுக்காக சிலாப் போடுகிறார்கள். அதன் பக்கத்தில் இருக்கின்ற மக்கள் இவைகளை துவைக்கின்ற கல்லாக மாற்றி விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே மலேசியா சிங்கப்பூர் போன்ற பகுதி களில் இருக்கின்ற நிலை இங்கே ஏற்படவேண்டும் என்று சொன்னால் அப்படிப்பட்ட செல்வம் நமக்கு இருக்க வேண்டும். ஆகவே அந்த நிலை வருகின்ற நேரத்தில் நீங்கள் சொல்லியபடி குக் கிராமங்களிலும் நடைமுறையில் இதுபோன்ற புகார் புத்தகங்களை வைத்துவிடலாம். ஆனால் புகார்புத்தகம் வைத்தால் அந்த புகார் புத்தகமே காணவில்லை என்று சொல்லி அதற்கு ஒரு புகார் புத்தகம் வைக்கின்ற நிலை இங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு என்ன என்ன மேலான யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்களோ அவைகளை எல்லாம் எது எது மாநகராட்சியின் மூலம் செயல்படுத்த முடியுமோ அவைகளை எல்லாம் கண்டிப்பாக செயற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு.

1984–85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1984-85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

'In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1984-85.'